


32ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059 www.vlambaram.com
email: vlambaram@sympatico.ca www.tamilvanakkam.com




நதி: 32 | பாலம்: 19 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | OCTOBER 01, 2022

# கோவிட்-19இன் கட்டுப்பாடுகள் நீக்கப்படுகின்றன

2022 ஒக்ரோபர் 1ஆம் திகதியில் இருந்து கனடிய எல்லைகளில் கனடாவிற்குள் வருவோருக்கு விதிக்கப்பட்டிருந்து கோவிட்-19 பெரும் தொற்றுநோய்ப் பரவல் தொடர்பான கட்டுப்பாடுகள் எல்லாம் நீக்கப்படுகின்றன என கனடிய மத்திய அரசு செப்ரெம்பர் 26ஆம் திகதி அறிவித்தது.

உலக சுகாதார நிறுவனம் (WHO) 2020 மார்ச் 11இல் கோவிட்-19 பெரும்தொற்று நோய்ப் பரவலை (Pandemic) அறிவித்திருந்தது. அன்றிலிருந்து படிப்படியாகக் கனடாவில் அமலுக்கு வந்த கட்டுப்பாடுகள் எல்லாம் 2022 செப்ரெம்பர் 30ஆம் திகதி நள்ளிரவுடன் நீக்கப்படுகின்றன.

ஒக்ரோபர் 1ஆம் திகதியில் இருந்து கனடாவிற்குள் வரும் பயணிகள் எவரும், அவர்கள் கனடியர்களாக இருந்தாலும் சரி வெளிநாட்டவர்களாக இருந்தாலும் சரி:

* தடுப்பூசிகள் போட்டதற்கான ஆதாரத்தை வழங்கத் தேவையில்லை.
* பிரயாணம் ஆரம்பிக்கும் முன்னரோ அல்லது பிரயாணத்தின் இறுதியிலோ கோவிட்-19 தொற்றுநோய்ப் பரிசோதனைக்கு உட்படத் தேவையில்லை.
* இணையத்தளம் மூலமோ அல்லது "ArriveCAN" செயலியைப் பயன்படுத்தியோ பொதுச் சுகாதாரத் தகவல்களைச் சமர்ப்பிக்கத் தேவையில்லை.
* கோவிட்-19 தொற்றுநோய் காரணமாகத் தடுத்து வைக்கப்படவோ அல்லது தனிமைப்படுத்தப்படவோ தேவையில்லை.
* கனடாவிற்குள் வந்த பிற்பாடு கோவிட்-19 தொற்று நோய்க்கான அறிகுறிகள் தோன்றுகின்றனவா என கண்காணிக்கவோ அல்லது அவ்வாறான அறிகுறிகள் தோன்றினால் பொது சுகாதார சபைக்கு அறிவிக்கவோ தேவையில்லை.
* விமானம் மற்றும் தொடருந்துப் பயணத்திற்காக எவ்விதமான சுகாதாரப் பரிசோதனையும் மேற்கொள்ளத் தேவையில்லை.
* விமானம் மற்றும் தொடருந்துப் பயணத்தின்போது முகக்கவசங்களை அணியத் தேவையில்லை.


Health Minister Jean-Yves Duclos

கனடிய மத்திய அரசின் சுகாதார அமைச்சர் Jean - Yeus Duclos ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில், “கனடிய மத்திய அரசின் கோவிட்-19 தொற்றுநோய்ப் பரவல் காரணமாக விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் எல்லாம் நீக்கப்படுகிறது என்றால் கனடாவில் கோவிட்-19 பெரும்தொற்று நீங்கிவிட்டது என்று எடுத்துக் கொள்ள வேண்டாம். வெளிநாடுகளில் இருந்துவரும் பயணிகளால் கனடாவினுள் கோவிட்-19 தொற்றுநோய் பரவல் தற்போது ஏற்படவில்லை எனத் தரவுகள் காட்டுகின்றன. நீங்கள் யாராவது கனடாவில் கோவிட்-19 பெரும் தொற்று அபாயம் நீங்கி விட்டது என நம்பினால் வைத்தியசாலைக்குச் சென்று பாருங்கள். அங்கு கோவிட்-19 தொற்றுநோயால் பீடிக்கப்பட்டுள்ளோர் அநேகர் உள்ளனர்.


இப்போது கோவிட்-19 தொற்றுநோய்ப் பரவல் முற்றிலும் உள்ளூரில் உள்ளோராலேயே ஏற்படுகிறது. கடந்த சில மாதங்கள் மற்றும் வாரங்களாக எமக்குக் கிடைத்த சான்றுகளை வைத்துத்தான் நாம் இந்த முடிவை எடுத்தோம். இவ்வாறான உள்ளூரில் உள்ளோரால் ஏற்படும் தொற்று நோய்ப் பரவலை தடுப்பதற்கான முயற்சிகளில் இனி நாம் கவனத்தைச் செலுத்த வேண்டும்” என்றார்.

கனடிய மத்திய அரசின் கோவிட்-19 பெரும் தொற்றுநோய்ப் பரவல் தொடர்பான கட்டுப்பாடுகள் நீக்கல் உல்லாசப் பிரயாணக் கப்பல்களுக்கும் (Cruise Ships) பொருந்தும். இனிமேல் உல்லாசப் பிரயாணக் கப்பல்களில் பிரயாணம் செய்வோர் பிரயாணம் ஆரம்பிக்குமுன்னர் கோவிட்-19 தொற்றுநோய்ப் பரிசோதனைக்கு உட்படத் தேவையில்லை. அவர்கள் தாங்கள் கோவிட்-19 தடுப்பூசி போட்டவர்கள் என உறுதிப்படுத்தவும் தேவையில்லை. அத்துடன் இணையத்தளம் மூலமோ அல்லது "ArriveCAN" செயலியைப் பயன்படுத்தியோ பொதுச் சுகாதாரத் தகவல்களைச் சமர்ப்பிக்கவும் தேவையில்லை.

செப்ரெம்பர் 20ஆம் திகதி கனடிய நாடாளுமன்ற உறுப்பினர் சிலரும், கனடிய எல்லைப்புற நகரங்களின் நகர முதல்வர் சிலரும் சேர்ந்து கடினய-அமெரிக்க எல்லையில் பயணிப்போருக்கு விதிக்கப்பட்டிருந்த கோவிட்-19 பெரும் தொற்று நோய்ப்பரவல் தொடர்பான கட்டுப்பாடுகளை நீக்குமாறு கேட்டு கனடிய மற்றும் அமெரிக்க அரசுகளுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

அவர்கள் கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோவிற்கும் அமெரிக்க அதிபர் ஜோ

(தொடர்ச்சி 02ஆம் பக்கம்...)



























# கோவிட்-19...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

பைடனுக்கும் எழுதிய பகிரங்கக் கடிதத்தில், “கோவிட்-19 பெரும் தொற்று நோய்ப் பரவல் அதி உச்சத்தில் இருந்த போது, பரவும் வேகத்தை குறைப்பதற்கு இரு நாடுகளின் எல்லையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பயனுள்ளதாக இருந்த போது கனடியர்களையும், அமெரிக்கர் களையும் பாதுகாப்பாக வைத்திருக்க எங்கள் பங்கை நாங்கள் செய்தோம். இப்போது இரு நாடுகளும் பெரும்பாலும் இயல்பான அன்றாட வாழ்க்கைக்குத் திரும்பி விட்டது. தொடர்ந்தும் கனடிய-அமெரிக்க எல்லையின் ஊடாகப் பயணிப் போருக்கு விதிக்கப்பட்டிருக்கும் கோவிட்-19 பெரும் தொற்று நோய்ப்பரவல் தொடர்பான கட்டுப்பாடுகளால் பொருளாதார மீட்பு முயற்சியில் எமது எல்லை நகரங்கள் பின்தங்கியிருக் கின்றன. தற்போது இக்கட்டுப்பாடுகள் அர்த்தமுள்ளவையாகவோ அல்லது உதவி செய்வதாகவோ தெரியவில்ல. இவை எல்லை நகரங்களில் உள்ள சமூகங்களுக்கும் மற்றும் வணிக நிறுவனங்களுக்கும் தீங்கு விளைவிப்ப தாகவே இருக்கின்றன.” எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இப்பகிரங்கக் கடிதத்தில் கனடிய எல்லைப்புற நகரங்கள் 15இனுடைய நகர முதல்வர்களும், அமெரிக்க எல்லைப்புற நகரங்கள் 7இனுடைய நகர முதல்வர் களும் மற்றும் 16 கனடிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் கையெழுத்திட்டிருந்த னர். இக்கடிதத்தில் கையெழுத்திட்ட வின்ஸர் மேற்குத் தொகுதி புதிய ஜனநாயகக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் Brian Masseஐத் தவிர ஏனைய 15 நாடாளுமன்ற உறுப்பினர் களும், கனடியப் பழமைவாதக் கட்சி உறுப்பினர் ஆவர்.

கனடிய மத்திய அரசின் கோவிட்-19 பெரும் தொற்றுநோய்ப் பரவல் தொடர்பான கட்டுப்பாடுகள் நீக்கப்படு கின்றன என்ற செப்ரெம்பர் 26 ஆம் திகதி அறிவிப்பைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த Niagara Falls நகர முதல்வர் Jim Diodati. “கனடிய மத்திய அரசு, பிரயாணம் செய்வோருக்கு விதிக்கப் பட்டிருந்த கட்டுப்பாடுகளை நீக்கியதால் நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். ஆனால், அமெரிக்க உல்லாசப் பயணிகளில் எவ்வளவு பேர் ஏற்கனவே கனடாவிற்கு வருவதைத் தவிர்த்து வேறு இடங்களுக்குப் பயணிக்கத் திட்டமிட்டு விட்டார்களோ என அஞ்சுகிறோம். பலர் இக்கோடை விடுமுறையில் வேறு இடங்களுக்குப் பிரயாணம் செய்து தமது பழக்கத்தை மாற்றி விட்டனரோ தெரியவில்லை” என்றார்.

கனடாவின் துணைத் தலைமை சுகாதார அதிகாரி Dr. Howard Njoo ஊடகங் களுக்குத் தெரிவிக்கையில், “விமானம் மற்றும் தொடருந்தில் பயணிக்கும்போது பயணிகள் இனி முகக்கவசம் அணிய வேண்டிய கட்டாயம் இல்லை. ஆனால் பயணிகள் முகக்கவசம் அணிய வேண்டும் என்றே நான் பரிந்துரை செய்கிறேன். முகக்கவசம் அணிவது


Canada's deputy chief health officer, Dr. Howard Njoo

தனிப்பட்ட பாதுகாப்பிற்கான ஒரு வழி முறையாகும். இது மிகவும் பயனுடையது என்பதில் விஞ்ஞானம் மிகத் தெளிவாக உள்ளது. கனடியர் இது விடயமாக அறிவுபூர்வமாக முடிவெடுப்பர் என நான் நம்புகிறேன்” என்றார்.

கனடிய மத்திய அரசின் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் Marco Mendicino ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில், “கனடாவிற்குப் பயணம் செய்வோர் இனி கட்டாயமாக முன்கூட்டியே "ArriveCAN" செயலியைப் பயன்படுத்திப் பொதுச் சுகாதாரத் தகவல்களை சமர்ப்பிக்கத் தேவையில்லை. ஆனால், ArriveCAN செயலியைப் பயன்படுத்திப் பயணிகள் முன்கூட்டியே சுங்க அறிவிப்புகளைச் (Customs declarations) செய்வதற்குப் பயன்படுத்தலாம். இதன்மூலம் அவர்கள் எல்லையில் காத்திருக்கும் நேரத்தைத் தவிர்க்கலாம். தற்போது ArriveCAN செயலி மூலம் சுங்கத் தகவல்களை முன் கூட்டியே சமர்ப்பிக்கும் வசதி ரொறொன்ரோ, மொன்றியல் மற்றும் வன்கூவர் சர்வதேச விமான நிலையங் களில் கிடைக்கிறது. விரைவில் இவ்வசதி கல்கரி, எட்மண்டன், வினிப்பெக் மற்றும் ஒட்டாவா விமான நிலையங்களுக்கு விரிவுப்படுத்தப்பட உள்ளது. ArriveCAN செயலி மூலம் பயணிகள் எல்லையில் காத்திருக்கும் நேரத்தை முன்கூட்டியே அவர்களுக்கு வழங்கும் வசதியையும் அதில் சேர்ந்து வழங்கத் திட்டமிடப் பட்டுள்ளது” என்றார்.

கனடிய மத்திய அரசின் கோவிட்-19 பெரும்தொற்று நோய்ப் பரவல் தொடர்பான கட்டுப்பாடுகள் கனடிய எல்லையில் கனடாவிற்குள் வருவோருக்கு நீக்கப்படுகின்றன என்ற அறிவிப்பைத் தொடர்ந்து கனடியப் பழமைவாதக் கட்சியின் தலைவர் Pierre Poillievre இந்த அரசின் முடிவு தங்களுக்குக் கிடைத்த வெற்றி எனக் குறிப்பிட்டார். அவர் வெளியிட்ட Tweet அறிவிப்பில், “கனடா முழுவதிலும் உள்ள பழமைவாதக் கட்சி உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களின் தொடர்ச்சியான அழுத்தத்தினால் ரூடோவின் லிபரல் அரசு மிகவும் மோசமான ArriveCAN செயலி, விஞ்ஞான ஆதாரமற்ற கட்டாய தடுப்பூசி போடுதல் மற்றும் கட்டாயமாக

(தொடர்ச்சி 05ஆம் பக்கம்...)



Available Till Midnight
Including Weekends & Holidays

# ANTON DHARMASEELAN

MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

## CALL ME FIRST FOR ALL YOUR MORTGAGE NEEDS

| | |
|---|---|
| PURCHASE | MAJOR BANKS |
| REFINANCE | ALTERNATIVE LENDERS |
| SELF EMPLOYED | B LENDERS |
| BAD CREDIT | CREDIT UNIONS |
| INVESTMENT PROPERTY | TRUST COMPANIES |
| RENEWAL | PRIVATE LENDERS |

# 416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE

Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# கட்சி அரசியலுக்குள் நினைவேந்தல் நிகழ்வுகள்




இந்தியப் படையினர் இலங்கையில் நிலைகொண்டிருந்த 1987ஆம் ஆண்டில் இந்தியாவிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நீர் கூட அருந்தாமல் 12 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த தியாகி திலீபனின் நினைவு நாளான கடந்த 26ஆம் திகதி, யாழ்ப்பாணம் நல்லூரில் திலீபனின் நினைவிடத்தில் மேற்கொள்ளப்பட்ட நினைவேந்தல் நிகழ்வில் குழப்பம் ஏற்படுத்தப்பட்டது.

பொலிஸ், இராணுவம், புலனாய்வாளர்கள்தான் கடந்த காலங்களில் இவ்வாறான நினைவேந்தல் நிகழ்வுகளைக் குழப்பியிருக்கின்றனர். ஆனால், இம்முறை அரசியல்வாதிகளால் இந்த குழப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதுவும் தமிழ் தேசியவாதிகள் என்று கூறிக்கொள்ளும் அரசியல்வாதிகளால் இக்குழப்பம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நல்லூரில் அமைந்துள்ள தியாகி திலீபனின் நினைவிடத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் மோசமாக நடந்துகொண்டதாகப் பலரும் விமர்சித்து வருகின்றனர். தமிழ் தேசம் என்று எழுத்தப்பட்ட மஞ்சள் நிற ரீசேர்ட் அணிந்திருந்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் நடந்துகொண்ட விதம் காணொளிகளில் பதிவாகி இலத்திரனியல் ஊடகங்களில் வெளிவந்துள்ளமை பலரையும் முகம் சுழிக்க வைத்துள்ளதுடன், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

முன்னாள் போராளிகள், மாவீரர் குடும்பத்தினர், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், அரசியல் கைதிகளின் உறவினர்கள், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், ஏனைய அரசியல் கட்சியினர் என அனைத்து தரப்புகளுடனும் வலிந்து முரண்பாடுகளை ஏற்படுத்தி மோசமான முறையில் மஞ்சள் ரீசேர்ட் அணிந்தவர்கள் நடந்துகொண்டுள்ளனர். இவ்வாறானதொரு சூழ்நிலையில் அவர்களை கட்டுப்படுத்தாது, அருகில் கொட்டகைக்குள் இருந்து தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர்-நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பார்த்துக்கொண்டிருந்ததாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.



கிழக்கு மாகாணத்திலிருந்து திலீபனின் நினைவு ஊர்தியொன்றை ஏற்பாடு செய்து வடக்கு நோக்கி வந்துகொண்டிருந்த போது இதே மஞ்சள் ரீசேர்ட் இளைஞர்களே இணைந்திருந்தனர். இதனைப் பார்க்கும்போது ஓர் அரசியல் சார்ந்த நடவடிக்கையாகவே தோன்றியது. இதேவேளை, நினைவேந்தல் தொடக்க நாளுக்கு முதல் நாளான 14ஆம் திகதி இரவு தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் திலீபன் நினைவிடத்தினை மறைத்தவாறு பந்தல் அமைத்தபோது அங்கிருந்தவர்கள் அவ்வாறு செய்ய வேண்டாம் என்று கூறியதால் முரண்பாடு ஏற்பட்டது.

இறுதி நாள் நிகழ்விற்கான ஏற்பாடுகளை செய்ய முற்பட்ட யாழ். மாநகர சபை உறுப்பினர்களான பார்தீபன் மற்றும் தனுஜன் ஆகியோருடன் முரண்பட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் அவர்களை தாக்க முற்பட்டதாகவும் தகவல் வெளியானது.

நினைவேந்தலின் இறுதி நாளான 26ஆம் திகதி நினைவிடத்தை காலை முதல் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தனர் என்றும், நினைவிடத்தை சுற்றி நின்று, அஞ்சலி செலுத்த வந்த பொதுமக்களை மாத்திரம் அனுமதித்து மற்றைய கட்சிகள், அமைப்புக்களை சார்ந்தவர்களை அவ்விடத்தில் இருந்து அப்புறப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

திலீபன் உயிர்நீத்த 10:48 மணியளவில் பொதுச்சுடர் ஏற்றப்படுவதாக இருந்த போது, தாமே அவற்றை முன்னிருந்து ஏற்ற வேண்டும் எனும் போட்டியில் 3 நிமிடங்கள் முந்தி 10:45 மணியளவில் தீபத்தினை ஏற்றியுள்ளனர்.

கைதடி பகுதியில் இருந்து இரு இளைஞர்கள் தூக்குக் காவடி எடுத்து தியாகி திலீபனின் நினைவிடத்தை 10:40 மணியளவில் வந்தடைந்து, நினைவிடத்தின் முன்பாக காவடியை இறக்க முற்பட்ட போதும் மஞ்சள் உடை அணிந்தவர்கள் முரண்பாடுகளை ஏற்படுத்தினர். அப்பகுதியில் தர்க்கம் அதிகரித்தபோது, மூன்று நிமிடங்களுக்கு முன்னரே அவர்களால் தீபம் ஏற்றப்பட்டுவிட்டது. அவ்விடத்தில் அமைதியின்மை ஏற்பட்ட போது, சகலரையும் அமைதி காக்குமாறு வேலன் சுவாமிகள் கேட்டுக்கொண்ட போது, அவரை தகாத வார்த்தைகளால் திட்டினர்.

தொடர்ந்து மலர் அஞ்சலி செலுத்தும் நிகழ்வின் போதும் வருவோருக்கு இடையூறாக அவ்விடத்தில் அவர்கள் தடைகளை மேற்கொண்டனர். இந்தக் குழப்பங்களின் போது தீபத்தின் சுடு எண்ணெய் பட்டு ஒருவர் காயமடைந்தார். அவரை அங்கிருந்தவர்கள் நோயாளர் காவு வண்டியில் ஏற்றி யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். இவ்வாறு தியாகி திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு குழப்பமான நிலையில் முடிவடைந்தது.

நடைபெற்ற சம்பவங்கள் காணொளிகள் மூலம் இணையத்தளங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் வெளியாகி உலகம் முழுவதும் உள்ள தமிழ் மக்களை ஆத்திரப்படுத்தியுள்ளது. இந்த குழப்பங்களுக்கு காரணமானவர்கள் மீதான வெறுப்பினையும் ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக பேச்சாளரான சட்டத்தரணி சுகாஸ் தங்கள் மீதான குற்றச்சாட்டை மறுதலித்துள்ளார்.

யாழ். மாநகரசபை முதல்வர் மணிவண்ணன் குழுவினராலேயே தியாகி திலீபனின் நினைவேந்தல் நிகழ்வில் குழப்பத்தை ஏற்படுத்த சதி மேற்கொள்ளப்பட்டது என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாண அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பில் அவர் தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பியின் வழிகாட்டலில் மாநகரசபை முதல்வர் மணிவண்ணன், அரச புலனாய்வுப் பிரிவினரின் இயக்கத்தில் இயங்குகின்ற ஜனநாயக போராளிகள் கட்சியினர் மற்றும் சில வெளிநாடுகளின் நிகழ்ச்சி நிரல்களை மேற்கொள்ளும் தரப்பினரால் நினைவேந்தலை குழப்புவதற்கு பல்வேறுபட்ட சதி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்துள்ள அவர், தமிழர்களுடைய அபிலாசைகளை முன்வைக்கின்ற ஓர் இடமாக, தியாகி திலீபனின் நினைவேந்தல் இடத்தினைப் பார்க்காமல் தமிழ் தேசிய அரசியலை நீக்கம் செய்து, இந்தியாவிற்கு இருக்கின்ற வரலாற்றுக் கடமையை தட்டிக் கழிக்கின்ற, மறைக்கின்ற ஒரு சதிதான் அங்கு நடந்தது என்றும் தெரிவித்துள்ளார்.

தியாகி திலீபனின் அபிலாசைகளையும் ஐந்து அம்ச கோரிக்கைகளையும் அவ்விடத்தில் பேசாது வெறுமனே அழுது விட்டு செல்லுமாறு கூறுவது இந்தியாவை காப்பாற்றுகின்ற செயற்பாடு என்றும் அவர் கூறினார்.

கடந்த ஆறு ஆண்டுகளாக பல்வேறு அடக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்ட போது தியாகி திலீபனின் நினைவேந்தலை முன்னெடுக்க எவரும் வரவில்லை. அடக்கு முறைகள் குறைக்கப்பட்டுள்ளதாகக் காட்டப்படுகின்ற இந்த சந்தர்ப்பத்தில் பலர் அடிபடுகின்றனர். மதத் தலைவர்கள், சிவில் அமைப்புகள், பாதிக்கப்பட்ட தரப்பினரை உள்ளடக்கிய அமைப்புகளே பொதுக் கட்டமைப்பை பற்றி பேச வேண்டும். ஈ.பி.டி.பி கட்சியின் ஆதரவில் இருக்கின்ற யாழ். மாநகர சபை முதல்வர் எவ்வாறு பொதுக் கட்டமைப்பற்றி பேசலாம்? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

நடந்த தவறுகளை தெளிவாக எடுத்துரைத்து தாங்கள் இந்தக் குழப்பங்களுக்கு காரணமில்லை என்பதை வெளிப்படுத்துவதற்கு அப்பால் தங்களின் அரசியல் எதிரிகள் மீது சேறடிக்கும் வகையிலேயே சுகாஸின் விளக்கம் அமைந்துள்ளது.



விடுதலைக்காகப் போராடி உயிர்நீத்த போராளிகளை நினைவுகூர்வது, அவர்களுக்கான நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவது யாவும் பொதுமக்களுக்கு உள்ள உணர்வுபூர்வமான கடமை. அதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுக்க முடியாவிட்டாலும், இடையூறு செய்யமலாவது இருக்க வேண்டும். இவ்வாறான நினைவேந்தல் நிகழ்வுகளை கட்சி அரசியலுக்குள் கொண்டு வராமலிருக்க வேண்டும். பொதுமக்கள் சார்ந்த கட்டமைப்பு ஒன்றை உருவாக்கி அந்த கட்டமைப்பினூடாகவே இந்நிகழ்வுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

கடந்த காலங்களிலும் நினைவேந்தல் நிகழ்வுகளில் குழப்பங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக, முள்ளிவாய்க்கால் நினைவு நாளில் கட்சிகள் வெவ்வேறாக நிகழ்வுகளை நடத்தி குழப்பியிருக்கின்றன. இனிவரும் நாள்களில் இவ்வாறான நிகழ்வுகள் கட்சி அரசியலுக்குள் சிக்க இடமளிக்கப்படக் கூடாது.

விளம்பரம்
VLAMBARAM
32ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.
'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.
Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# மிகவும் மோசமான நிலையில் மக்களின் வாழ்வாதாரம்

**- விகிர்தன் -**

இலங்கை மக்களின் வாழ்வாதாரம் மிகவும் மோசமான நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. மக்கள் தங்கள் நாளாந்த செலவுகளை எவ்விதத்திலும் சமாளிக்க முடியாத நிலையில் உள்ளனர். பல குடும்பங்களில் ஒரு வேளை உணவையே உண்ணும் நிலை ஏற்பட்டுள்ளது.

அதிகரித்துள்ள உணவுப் பொருள்களின் விலைகள் குறையவில்லை. மேலும் விலை உயர்வும் தட்டுப்பாடுகளும் ஏற்பட்ட வண்ணமே உள்ளன.

சாதாரண மக்களின் அத்தியாவசிய உணவுப்பொருளான பாணின் விலை 500 ரூபாய்வரை உயரக்கூடும் என வெளியாகும் தகவல்கள் மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. பாண் தயாரிப்பிற்கான மூலப்பொருளான மாவின் விலை உயர்ந்து வருவதாலும், மாவிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாலும் பாணின் விலையை உயர்த்த வேண்டியுள்ளதாக பேக்கரி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மா மற்றும் முட்டையின் விலை அதிகரிப்பு மற்றும் தட்டுப்பாடு காரணமாக நாடு முழுவதும் சுமார் 2,000 பேக்கரிகள் மூடப்பட்டுள்ளதாகவும், இதன் காரணமாக இத்தொழிலை நம்பியுள்ள சுமார் 100,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மற்றுமொரு பேரிடியாக வந்திருப்பது மின்சாரக் கட்டண உயர்வு. மின்சாரக் கட்டண சிட்டையை பார்க்கும்போது தலை சுற்றுகின்றது. திடீரென 75 வீதம் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள் ளது. பல ஆண்டுகளுக்குப் பிறகு மின்சாரக் கட்டணம் உயர்த்தப்படுவதாக அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டாலும் இந்த சந்தர்ப்பத்தில் இதனை உயர்த்து வது பொருத்தமானதாக இல்லை. உணவுப்பொருள்களின் அதீத விலை உயர்வை சமாளிக்க முடியாமல் மக்கள் அவதிப்படும் நிலையில் மின்சாரக் கட்டண உயர்வு என்பது அவர்கள் மீது மின்சாரத்தை பாய்ச்சுவதைப் போல் அமைந்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் உள்ள பத்தில் நான்கு குடும்பங்கள், போதிய உணவுகளை உட்கொள்வதில்லை என்று உலக உணவுத் திட்டத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இலங்கையர் களின் உணவு முறை ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் அதற்கான செயற்பாடுகள் துரிதப்படுத்தப்படாவிட்டால் நிலைமை இன்னும் மோசமடையக்கூடும் என்றும் உலக உணவுத் திட்டம் எச்சரித்துள்ளது.

இலங்கைக்கான நிவாரணத்திற்கு 63 மில்லியன் டொலர்களைத் திரட்ட வேண்டியுள்ளதாகவும் அதன் பாதியளவே தற்போது கிடைத்துள்ளதாகவும் உலக உணவுத் திட்டம் குறிப்பிடப்பட்டுள்ளது.



ஐந்து வயதிற்குக் குறைந்த குழந்தை களில், நிறை குறைந்த அதிகமான குழந்தைகள் கடந்த ஓகஸ்ற் மாதத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார மேம்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது. போதிய உணவின்மை யும் அதனுடன் ஊட்டசத்துக் குறைபாடும் இவ்வாறு நிறை குறைவதற்கான காரணம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ரணில் விக்ரமசிங்க நாட்டின் ஜனாதிபதி யாகப் பொறுப்பேற்றதும் நிலைமை படிப்படியாக சீரடையும் என நாட்டு மக்கள் எதிர்பார்த்தனர். அது நடக்கவில்லை. சர்வதேச நாடுகளிடம் உதவிகளைக் கோரும் முயற்சியில் அவர் நேரடியாகவே களமிறங்கியிருப்பதை காண முடிகின்றது. பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக வெளிநாடுகளுக்குப் பயணம் செய்துவரும் அவர் அங்கு பல நாடுகளின் தலைவர்களுடனும் கலந்துரையாடி உதவி கோருகின்றார். சுட்டுக் கொல்லப்பட்ட ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட வேளையிலும் அங்கு பல நாட்டுத் தலைவர்களையும் சந்தித்து இலங்கையின் நிலைமை குறித்து கலந்துரையாடி யுள்ளார். ரோக்கியோவில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடனும் அவர் கலந்துரையாடினார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி, இந்தியாவின் உதவி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இருவரும் கலந்துரையாடியுள்ளனர். மிக மோசமான பொருளாதார நெருக்கடி நிலைமையில் நாட்டின் ஜனாதிபதி பொறுப்பை ஏற்றுக் கொண்ட ரணில் விக்ரமசிங்க மந்திரவாதி போல் செயற்பட்டு மாற்றங்களை ஏற்படுத்த முடியாதுதான். ஆனால், மளமளவென உயர்ந்துள்ள விலை அதிகரிப்பை மேலும் அதிகரிக்காமலிருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். விலை உயர்வுகளை கட்டுப்படுத்தாத நிலையில், மின்சாரக் கட்டண உயர்வுகளை தவிர்த்திருக்க வேண்டும்.

தற்போது நாட்டில் மின் தடை நேரமும் அதிகரித்துக்கொண்டு போகின்றது. அது மேலும் அதிகரிக்கப்படலாம் என்கின்ற தகவல்களும் வெளியாகி வருகின்றன. நாட்டில் தற்போது கையிருப்பில் 250,000 மெற்றிக் தொன் நிலக்கரி உள்ளதாகத் தெரிவித்த பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க, மின்சார உற்பத்திக்காக நிலக்கரியை இறக்குமதி செய்யாவிட்டால் 10 அல்லது 12 மணிநேரம் மின்வெட்டை அமல்படுத்த வேண்டி ஏற்படும் எனத் தெரிவித்துள்ளார்.

கையிருப்பில் உள்ள நிலக்கரி ஒக்ரோபர் 28ஆம் திகதிவரை மட்டுமே போதுமானது எனவும் நுரைச்சோலையில் உள்ள இரண்டு மின் பிறப்பாக்கிகளையும் இயக்குவதற்கு நாளொன்றிற்கு 5000 மெற்றிக் தொன் நிலக்கரி தேவைப்படுவ தாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த நிலையிலிருந்து மீள ஐந்து நாட்களுக்கு ஒருமுறை நிலக்கரிக் கப்பலை கொண்டு வர வேண்டும் என்றும் அதற்கு 21 மில்லியன் டொலர்கள் தேவைப்படுவ தாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மின்சார விநியோகம் சீரற்றுக் காணப் பட்டால் நாட்டில் தொழில்கள் மோசமாகப் பாதிக்கப்படும்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியும், பொதுமக்களின் வாழ்வாதாரமும் மேலும் சிக்கல் நிலைக்குள் சென்று கொண்டிருப்பதைத்தான் அவதானிக்க முடிகின்றது.


## கோவிட்-19...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

முகக்கவசம் அணிதல் போன்றவற்றில் இருந்து பின்வாங்கியுள்ளது" எனத் தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் விடுத்த Tweet செய்தியில், "ஒக்ரோபர் 1ஆம் திகதி விஞ்ஞான நிகழ்வு எதுவும் மாறவில்லை. ஆனால், உங்கள் அழுத்தத்தால் ரூடோ மாறியுள்ளார். அதைத் தொடர்ந்து செய்யுங்கள்" எனத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் ஜோ பைடன் செப்ரெம்பர் 18இல் ஒளிபரப்பப்பட்ட "60 minutes" என்ற நிகழ்வில் எழுந்தமான மாக அமெரிக்காவில் கோவிட்-19 பெருந்தொற்று (Pandemic) முடிவடைந்து விட்டது எனக் கூறியிருந்தார். இது சரியான தகவல் எனவும் தவறான தகவல் எனவும் அமெரிக்க ஊடகங்கள் தங்கள் இருபக்கக் கருத்துகளையும் வெளியிட்ட வண்ணம் உள்ளன.




Public Safety Minister, Marco Mendicino

அமெரிக்காவில் தற்போது 30 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் கோவிட்-19 தொற்றுநோயால் பாதிக்கப்பட்டு மருத்துவ மனைகளில் இருக்கின்றனர். அத்துடன் கோவிட்-19 தொற்று நோயால் நாள் ஒன்றுக்கு 400 பேர் அமெரிக்காவில் இறக்கின்றனர். இவ்வாறு இறப்போரின் எண்ணிக்கை முன்னர் நாள் ஒன்றுக்கு 4,000 பேராக இருந்தது குறிப்பிடத்தக்கது.


CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT

" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb

Commercial

. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry

. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc

STORE Tel: 416-289-7514

OPEN DAILY 8 am – 11 pm

Sat. & Sun 7 Am – 11 pm

(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# நாமும் நமது இல்லமும் 616



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

ஏற்கனவே நாம் ஆராய்ந்தது போல, செப்ரெம்பர் 07, 2022இல் 0.75% வட்டிவீத அதிகரிப்பு, முதன்மை வட்டி வீதத்தை 5.45%ஆக அதிகரித்துள்ளது. இதனால் அடமானக் கடன் பெறுவதில் மேலும் நெருக்கடியை கனடிய மக்களிற்கு ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே அடமானக் கடன் வைத்திருப்போர், மாறுகின்ற வட்டிவீதத்தில் (Variable Mortgage) தமது வட்டி வீதத்தில் இருந்தால், இவர்களின் மாதாந்த வட்டி வீதம் எதிர்பாராத அளவிற்கு அதிகரித்திருக்கும். அத்துடன் எதிர்காலத்திலும் மேலும் வட்டி வீதம் அதிகரிக்கப்படும் என இறுக்கமான தொனியில் கனடிய மத்திய வங்கியின் ஆளுநர் திரு. ரிம் மக்கலம் கூறியுள்ளார். ஏற்கனவே ஆதன வியாபாரத்திலும் விலையிலும் இறக்கம் தொடர்வதனைக் காணலாம். மேலும் அதே திசையில் செல்லலாம் என எதிர்பார்க்கலாம்.

இந்நிலை தொடருமாயின் வியாபாரத்திற்காக ஆதனம் வாங்கியவர்களின் நிலைமை மேலும் இக்கட்டான நிலைமையை அடையலாம். இவ்வாறானவர்கள் குறைந்த விலையிலும் ஆதனத்தை விற்க வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்படலாம்.

உதாரணமாக ரொறொன்ரோவின் மத்திய பகுதியில் அமைந்திருக்கும் ஓர் அடுக்கு மாடி மனை 3150 சதுரஅடி ஆரம்பத்தில் $8,329,000 (யூலை 2021)இற்கு சந்தைப்படுத்தப்பட்டது. தொடர்ச்சியாகப் பல தடவைகள் விலை குறைக்கப்பட்டு வந்தது. அண்மையில் $6,999,000 இற்குக் குறைக்கப்பட்டது. இதன் பிற்பாடு இந்த மனை $6,660,000 இற்கு விற்கப்பட்டது.

இவ்வாறு பல வீடு மற்றும் மனைகளில் இந்நிலைமையைக் காணலாம். இவ்வாறான விலை கூடிய ஆதனங்களை வாங்குபவர்களையும் காணலாம். மேலும் இதற்கு மாறுதலாக $1,300,000 ($1.3 மில்லியன்)இற்குக் குறைவாக சந்தைப்படுத்தும் மனைகளை வாங்குவதற்காக ரொறொன்ரோ பெரும்பாகத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட வாங்குபவர்கள் போட்டி போடுவதனையும் காணக்கூடியதாக உள்ளது.

இதற்கு முக்கிய காரணம் போதியளவு ஆதனங்கள் சந்தைப்படுத்தப்படவில்லை. செப்ரெம்பரிற்கும் நவம்பர் மாதத்திற்கும் இடையில், பொதுவாக அதிக ஆதனங்கள் சந்தைப்படுத்தப்படுவது இயல்பு. இப்பொழுது இந்நிலைமை மாறியுள்ளது. எதிர்வரும் மாதங்களிலும் இந்நிலைமையே தொடரும் என எதிர்பார்க்கலாம்.



குளிர்காலம் வருவதால், இந்நிலைமை தொடர, தொடர்ச்சியாக விலை குறைவதாலும் ஆதன வியாபாரம் குறைவதாலும் ஆதனத்தை உரிமை கொள்ளுபவர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதனைக் காணலாம்.

கடந்த வருடம் 66.5%ஆன கனடியர்களே ஆதனத்தை உரிமை கொண்டுள்ளனர். 2001இன் ஆரம்பத்திலிருந்து இதுவே மிகக் குறைந்த எண்ணிக்கையாகும். (2001இல் இந்த எண்ணிக்கை 65.8%ஆகக் காணப்பட்டது) இந்த எண்ணிக்கை 2011இல் அதிகூடியதாக 69%ஆகக் காணப்பட்டது.

ஒன்ராறியோவின் சில நகரங்களில் வாடகையாளர்களின் எண்ணிக்கை, சொந்தமாகக் கொண்டுள்ளவர்களை விட அதிகமாக உள்ளது. உதாரணமாக Barrie, Ontarioஐக் கொள்ளலாம். இதற்கு வேறு ஒரு காரணமும் உண்டு. அதாவது, நிர்மாண (Builders) முதலீட்டாளர்கள், வாடகை வியாபாரத்திற்கான அடுக்குமனைகளை நிர்மாணிப்பதாகும். விற்பனைக்கல்ல.

இதனால், முதலீட்டாளர்கள் தொடர்ச்சியாக மாதந்த வருமானத்தைப் பெறக் கூடியதாக இருக்கும். அத்துடன் அடமானக்கடன் பெறுவதில் நெருக்கடி, ஆதன விலை, போதியளவு ஆரம்ப முதலீடு இல்லாமை கனடியர்களை வாடகையை நோக்கியே தள்ளுகின்றது. 30 வயதிற்கு மேற்பட்டவர்களே அதி வேகத்தில் உரிமை கொள்வதனைக் குறைத்து வருவதனைக் காணலாம். இந்நிலைமை உடனடியாக மாறும் எனத் தெரியவில்லை.

---

# அமைதிக்கான தேவை

**Words of Peace**
பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்துகொள்ள:
**www.premrawat.com**

## *The Demand for Peace*

உயிர்வாழ்வு தரும் விருப்பத் தெரிவுகள் பற்றியும் - வித்தியாசமான வாழ்க்கை முறைகள் பற்றியும் - வித்தியாசமான தொழிற்துறைகள் பற்றியும்- வித்தியாசமான பொழுது போக்குகள் பற்றியும் மக்கள் பேசுவதுண்டு. உயிர்வாழ்விற்கு ஒரு தேவையுள்ளது. அது விருப்பத் தெரிவிற்கான ஒன்று அல்ல என்பதை நாம் அடிக்கடி மறந்துவிடுகிறோம் எனப் பல நாடுகளால் சமாதானத்தின் தூதுவர் என இனங் காணப்பட்ட திரு. பிரேம் ராவத் கூறுகிறார். அவர் கூறுவதை தெளிவுபடுத்துவதற்காக, அரசன் சொலமனைப் பற்றியும் ஒரு குழந்தைக்காக உரிமைகோரிய இரு பெண்கள் பற்றிய கதையையும் திரு. ராவத் கூறுகிறார்.

மிகவும் புத்திசாலி எனப் பெயர் பெற்ற அரசன் சொலமனின் அரசவையில் ஒரு தடவை இரு பெண்கள் ஒரு குழந்தையைக் கொண்டுவந்து அக்குழந்தை தம்முடையதென உரிமை கொண்டாடினர். அவ் இருவருக்கும் இடையே இருந்த சகல பூசல்களையும் கேட்டறிந்ததன் பின்னர் அரசன் சொலமன் வாள் ஒன்றைக் கொண்டுவரும்படி கேட்டான். "இரு பெண்களுக்குமே இந்தக் குழந்தை தேவையாக இருப்பதனால் எம்மால் செய்ய முடிந்ததெல்லாம் இக்குழந்தையை இரண்டாகப் பிளப்பதுதான் என அரசன் கூறினான். உனக்கு ஒரு பாதியைத் தருகிறேன், உனக்கு மற்றப் பாதியைத் தருகிறேன் எனக் கூறினார். வாளைக் கொண்டுவரும்வரை அவர்கள் இருவருமே அமைதியாக இருந்தனர். வாளைத் தூக்கியபோது ஒரு பெண் பொறுங்கள்! நிறுத்துங்கள்! அவளிடமே குழந்தையைக் கொடுத்துவிடுங்கள். அதைத் துண்டாட வேண்டாம். அவளே அதை வைத்திருக்கட்டும் எனக் கூறினாள்.

அரசன் சொலமன் வாளைக் கீழே வைத்துவிட்டு: "உரையாடிய பெண்ணிடம் குழந்தையைக் கொடுங்கள்" எனக் கூறினார். இக்குழந்தை அவளுக்குத்தான் சொந்தமானது.

இப்பொழுது இக்கதையின் கருத்தென்ன, "உண்மையான தாயின் தெரிவு பாதிக் குழந்தை அல்ல. ஏனெனில் அவள் உண்மையான தாய். குழந்தை உயிருடன் இருப்பதுதான் அவளின் விருப்பம். அப்படிப்பட்டதுதான் தாய்மை. உயிர் வாழ்வும் எவ்வித தெரிவுகளையும் வழங்குவதில்லை. அது தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் ஒன்று. அது நடந்து கொண்டிருக்கிறது. உங்கள் உள்ளே அமைதிக்கான தேவையை நீங்கள் உணர்கிறீர்களா? உயிர்வாழ்வுதான் அமைதியைத் தேடுகிறது. நாம் உயிரோடு இருக்கும்வரை எங்களுக்கு அமைதி தேவை.
உண்மையாகவே உயிர் வாழ்தல் என்பதன் கருத்து-அந்த வேண்டுகோளின் அவசியத்தைப் புரிந்துகொள்வதும், இந்த உயிர் வாழ்விற்கு உண்மையிலேயே என்ன தேவை என்பதைப் புரிந்து கொள்வதும்தான் என திரு. ராவத் கூறுகிறார். நான் யார்? உண்மையாகவே எனக்கு என்ன தேவை? அதன் உப பகுதிகள் என்ன? எனக்கு அவசியமாவை எவை? நான் எவ்வளவுதான் முழுமையானவனாக இருக்கத் தெண்டித்தாலும் அத்தேவை பூர்த்தி செய்யப்படாத படியால் நான் இன்னும் முழுமையற்றவனாக உணர்கிறேன்.

எமக்கு என்ன நடந்துள்ளது? என திரு. ராவத் கேட்கிறார். மாயை உண்மையாகவும் உண்மை மாயையாகவும் மாறியுள்ளது. ஓ அமைதியா? எனக்கு அதில் ஈடுபாடில்லை என மக்கள் கூறுகின்றனர். உண்மையாகவா? அமைதிதான் எமது முதலாவது முன்னுரிமையாக இருக்க வேண்டும். என்ன நடைபெறுகிறது? மக்கள் தமது திருமண பழக்க வழக்கங்களை பாதுகாக்க முயற்சிக்கின்றனர். ஆனால் திருமணம் பல பக்கங்களாலும் உடைந்து போகிறது. அது ஏன் என நான் ஆச்சரியப்படுவதுண்டு. பெற்றோர் தமது பிள்ளைகளைப் புரிந்து கொள்ளாமையினாலா? அல்லது பிள்ளைகள் தமது பெற்றோரை புரிந்து கொள்ளாமையினாலா இது நடைபெறுகிறது.?

நல்ல பழக்கவழக்கங்களைக் கொண்டிருப்பதைப் பற்றி நான் பேசவில்லை. நான் மரியாதை செலுத்துவதைப் பற்றிப் பேசுகிறேன். மனிதரிடம் ஏனைய மனிதருக்கான மரியாதை இல்லை. அத்துடன் எமக்கு நாம் மரியாதை செலுத்தும் போதுதான் மற்றவர்களுக்கான மரியாதை ஏற்படும். பாலைவனத்தில் மழை பெய்யும்போது மண்ணுக்கடியில் காத்திருக்கும் கோடிக் கணக்கான வித்துக்கள் தமக்கான நேரம் வந்துவிட்டதென்பதைப் புரிந்துகொள்கின்றன. எவரும் அவற்றை விழித்தெழும்படி கேட்டுக்கொள்ளத் தேவையில்லை. மழை வந்துவிட்டது. இதற்குத்தான் அவை காத்திருந்தன, பாலைவனம் மலர்கிறது. அதே போலத்தான் "நான் புரிந்துணர்வு என்னும் மழையைப்பற்றி, ஞான அறிவு என்னும் மழையைப்பற்றி, தெளிவு என்னும் மழையைப் பற்றிப் பேசுகிறேன், அந்த மழை வரும் போது பாலைவனத்தில் இருக்கும் மலர்கள் மலர்கின்றன. அந்த மழை இல்லாமல் நாம் பாலைவனம் போலத்தான் இருக்கிறோம். அன்பு இல்லாமல், உணர்வு இல்லாமல், புரிந்துணர்வு இல்லாமல், மரியாதை இல்லாமல், நாம் யார்?

வாழ்வில் நாம் அடையும் சகல சாதனைகளிலும் மிக முக்கியமானது எது?

இந்த வாழ்வு என அழைக்கப்படும் இம் மந்திரத்துடன் நாம் தொடர்பில் இருந்தால், அப்போது எமது வாழ்வுக்கு எது தேவைப்படுகிறது என எமக்குத் தெரியும். உயிர் வாழ்வு அமைதியைத்தான் கேட்கிறது. அப்போதுதான் உயிர்வாழ்வால் நடனமாட முடியும். அதனால் செழிப்படைய முடியும். அதாகவே இருக்கமுடியும், விரிவடைய முடியும், எம்மைப் பற்றிக்கொள்ள முடியும். அப்போதுதான் நிறைவடைந்ததாக இருக்கும். அது இல்லாமல் எம்மிடம் இருப்பதெல்லாம் பயம் மட்டும்தான்"




MORTGAGE FINANCIAL
SUBRA
MORTGAGE SOLUTIONS
• RESIDENTIAL • COMMERCIAL
• INDUSTRIAL • VACANT LAND
• CONSTRUCTION
5 YEARS VARIABLE CLOSED
Loan Amount $755,460.00
Biweekly Payment $1,177.78
5 YEARS FIXED
Loan Amount $755,460.00
Biweekly Payment $1,200.90
NESAN
416-908-5656
• 1st, 2nd & 3rd Mortgages • Purchase • Refinance
• Renewal • Switches • Equity lind of Credit • Pre-approvals
• Self-employed • Multi-rental properties • New immigrants
Office: 416-660.5656
Fax: 647451.3099
Toll: 1-844-678.2721
Unit #406, 1585 Markham Rd,
Toronto, M1B 2W1
www.subra.com
WE DEAL WITH ALL BANKS
Brokerage #10530
Powered by
MORTGAGE ALLIANCE
Scotiabank
radius financial
EQUITABLE BANK
RMG
TD Canada Trust
RFA
FIRST NATIONAL
HOME TRUST
MCAP

# நானிலம் போற்றும் நட்பு - 7



- அகணி -
authorakani@gmail.com

திருவள்ளுவர் குறள் 787
“அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு” என்ற குறளுக்கு “அழிவைத் தரும் தீமைகளில் இருந்து நீக்கி, நல்ல வழியில் நடக்கச் செய்து, அழிவுவந்த காலத்தில் உடனிருந்து துன்பப்படுவதே நட்பாகும்.” என்று உரையாசிரியர் மு. வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

“நண்பனுக்கு வரும் துன்பங்களை நீக்கி, அவனை நல்வழிப்படுத்தியும், மீறித் துன்பம் வந்தால், அதில் தானும் பங்கு கொள்வதும்தான் நட்பு” என்று உரையாசிரியர் அருள்திரு திருக்குறள் மாமுனிவர் முனைவர் கு.மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார். “தீமையை நீக்கி நல்வழியில் செலுத்தி, துன்பம் வரும்போது உடனிருந்து அனுபவிப்பதே நட்பாகும்” என்று உரையாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

நல்வழிப்படுத்தலும், துன்பத்தில் உடனிருந்து உதவுவதும் நட்பு என்ற அருமையான கருத்தை இந்தக் குறள் எடுத்துக் கூறுகிறது. இதன்மூலம் நட்பு என்ற உறவு எவ்வளவு மேன்மையானது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

சங்கம் மருவிய காலத்தில் பல சமண முனிவர்களால் இயற்றப்பட்ட நாலடியாரில் நட்பு பற்றிக் கூறும் கருத்துக்களையும் ஆராய்வோம். நாலடியார் பொருட்பாலில் அதிகாரம் 22 நட்பாராய்தலில் நாலடியார் பாடல் 211 இனைக் கவனிப்போம்.

“கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை எஞ்ஞான்றும்
குருத்திற் கரும்புதின் றற்றே - குருத்திற்கு எதிர்செலத்தின் றன்ன தகைத்தரோ, என்றும்
மதுரம் இலாளர் தொடர்பு.”
இந்தப் பாடலுக்கு ஊ.புட்பரதச்செட்டியார் அவர்கள் கூறும் கருத்துரையைக் காண்போம்.

“கேண்மை - படித்தெடுத்தவரோடு கொண்ட சிநேகம், எஞ்ஞான்றும் - எப்போதும், குருத்தின் கரும்பு தின்றது அற்று - குருத்திலிருந்து கரும்பைத் தின்றாற் போலும் என்றும் - எக்காலத்தும், மதுரம் இலாளர் தொடர்பு - (கல்வியறிவாகிய) இனிப்பில்லாதவரோடு கொண்ட சிநேகம், குருத்திற்கு - எதிர் செல - எதிரே செல்லும்படியாக, அடியிலிருந்து என்கிறபடி, தின்று அன்னதகைத்து - தின்றாற் போலிருக்கிற குணமுள்ளது, கரும்பைக் குருத்திலிருந்து தின்றால் வரவர இனிமை யதிகமாவது போலே கற்றோர் கேண்மையு நாளுக்குநாளினிப்பாகும் அதற்கு எதிர் செலத்தின்றால் வர வர இனிமை குறைவது போல் கல்லாதார் நட்பு நாளுக்குநாள் உருசி குறைந்து வெறுக்கப்படும் என்பதாம். இக்கருத்தே கல்வியில் எட்டாம் பாட்டிலும் சொல்லப்பட்டது.

அற்றே என்பதில் ஏகாரம் தேற்றத்தில் வந்ததென்னலாம். உணர்ந்து என்னும் எச்சம் சற்று என்பதைக் கொண்டது. அறிந்தார் என்பதற்கு காரியா காரியங்களை அறிந்தவர்கள் என்பது பொருள். இதுதான் படித்தெடுத்தவர் என்று கூறப்பட்டது. உட்பொருள் தெரிய நூல்களைக் கற்று நன்மை தீமைகளைப் பகுத்தெடுக்குந் தன்மையுள்ளவர்கள்




என்பது திரண்ட கருத்து.”
உரையாசிரியர் ஞா.மாணிக்கவாசகன் அவர்கள் இந்தப் பாடலுக்கு “படித்தறிய வேண்டியவற்றைப் படித்துணர்ந்த பெரியோர் நட்பு எப்போதும் கரும்பை அதன் நுனிப்பகுதியில் இருந்து கடித்துத் தின்பதுபோல் போகப் போகச் சுவை தருவதாக இருக்கும். ஆனால் கரும்பை அடிப்பகுதியில் இருந்து நுனிநோக்கிக் கடித்துக் கொண்டு போவது போன்றது. இனிய குணமில்லாதவர்களுடன் கொண்ட உறவு. ஆரம்பத்தில் இனித்தாலும் போகப் போகக் கைக்கும்.” என்று உரை கூறியுள்ளார்.

நல்ல குணமுடையவர்களுடனும் பெரியோர் என்று கூறத்தக்களவு அறிவுடையோருடனும் கொள்ளும் நட்பு காலம் செல்லச் செல்ல இன்னும் சுவை கொண்டதாக இருக்கும். அன்றேல் ஆரம்பத்தில் இனித்தாலும் போகப் போகக் கைக்கும் என்று இந்தப் பாடலில் கூறப்படுகிறது. அறிவுடையோர் என்பது புரிந்துணர்வு கொண்டோர், வாழ்க்கைப் பாடத்தை பட்டறிந்தோர் என்றே பொருள் கொள்ளவேண்டியுள்ளது.

நாலடியார் பொருட்பாலில் அதிகாரம் 22 நட்பாராய்தலில் நாலடியார் பாடல் 212 இனைக் கவனிப்போம். இந்தப் பாடலுக்கு ஊ.புட்பரதச்செட்டியார் அவர்கள் கூறும் கருத்துரையைக் காண்போம்.
“இற்பிறப்பு எண்ணி இடைதிரியார் என்பதோர்
நற்புடை கொண்டமை யல்லது- பொற்கேழ்
புனலொழுகப் புள்ளரியும் பூங்குன்ற நாட!
மனமறியப் பட்டதொன் றன்று.”

“பொன் கேழ் - பொன்னிறமுள்ள, புனல் ஒழுக - அருவி நீர் பெருக, புள் இரியும் - பறவைகள் ஒடுகின்ற, பூ குன்ற நாட - அழகான மலை சூழ்ந்த நாடுடையவனே, இல் பிறப்பு எண்ணி - (அவருடைய) நற்குடிப்பிறப்பை எண்ணி, இடை திரியார் - நடுவில் மாறார்கள், மனம் அறியப்பட்டது ஒன்று அன்று - அவருடைய மனநிலை யறியப்பட்டதென்கிற ஒன்று அல்ல,

“சிநேகிப்பதற்கு கல்வி யறிவு காரணமானது போல் நற்குலப்பிறப்பும் காரணமாதலால் நற்குடிப் பிறந்தவர் மாறமாட்டாரென்ற உறுதியினால் சிநேகிக் கலாம் மனம் அறிவது அசாத்தியம் என்கிறபடி. பொன் மிகுதி பற்றி அந்நிறமுள்ள நீர் ஓடி வரக்கண்டு இது யாதோ என அஞ்சிப் பறவைகள் ஓடுகின்றன என மலையைச் சிறப்பித்தது.”

உரையாசிரியர் ஞா.மாணிக்கவாசகன் அவர்கள் இந்தப் பாடலுக்கு “உயர்ந்த குடிப்பிறப்பையும், நடுநிலை மாறாத நற்குணம் உடைய தன்மையையும் எண்ணி, நட்புக் கொள்ள வேண்டுமே அல்லாமல், பொன்போல் ஒளி சிந்தும் அருவிநீர் மலையில் இருந்து விழும் ஒலி கேட்டுப் பறவை இனம் பயந்து விலகிப்போகும் குறிஞ்சிப் பூ மலரும் மலைநாட்டுத் தலைவனே, வேறு எதையும் நாம் அப்படிப் பட்டவர்களிடம் எண்ணிப் பார்க்க வேண்டியதில்லை.”

இந்தப் பாடலில் உயர்குடிப்பிறப்பு எண்ணி நட்பு கொள்ள வேண்டும் என்று சுட்டுவது பாகுபாட்டைக் காட்டுவதால் இக்காலத் திற்கு உகந்த கருத்தாகத் தெரியவில்லை. அறநூல்கள் பலவற்றில் கூறப்படும் சில கருத்துகள் இக்காலத்தில் ஏற்றவையாக இல்லாமல் இருப்பதைக் காணமுடிகிறது.

நட்பு நிலைபெற்று இருப்பதற்கு வேண்டிய அடிப்படையான சில விடயங்களை முன்பு ஆராய்ந்திருந்தோம். நட்பு ஆரோக்கிய மானதாகவிருந்தால் மட்டுமே காலம் போகப்போக இனிக்கும். அன்றேல் காலப்போக்கில் சிக்கல்கள் உண்டாகும். நட்பு முறிவடையும் பொழுது ஏற்படும் வலி மிகவும் மோசமானது. இதனால் தற்கொலை வரை சென்றுவிடுகின்றனர். பலரும் அதனால் வரும் மனவழுத்தத்தில் இருந்து விடுபடமுடியாமல் பலத்த பாதிப்பிற்குள்ளாகின்றனர். எனவே நட்பை மேற்கொள்ள முன்பும், நண்பர்களாகப் பழகும் காலத்திலும் உன்னதமான உறவாகிய நட்பைப் பேணிப் பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும். நட்பெனும் உறவு சீரானதாகவிருந்தால் அதுவே பெரும் பலமாகும் என்பதில் ஐயமில்லை.

ஒரு மனிதனின் வாழ்க்கையில் நல்ல நண்பர்களைத் தேடிக் கொள்வதும் மிகவும் சவாலானதும் அவசியமானதுமான விடயம் ஆகும். நல்ல நண்பர்களைக் கொண்டவர்கள் அதிர்ஸ்டசாலிகள் என்றும் கூறலாம். ஆனால் அது யாருக்கும் சாத்தியமானதே. அதற்கான வழிமுறைகளைக் கண்டறியவேண்டும். எதிர்பார்ப்பின்றி நட்பு கொள்வதால் ஏராளம் நன்மை ஏற்படும்.

நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். “நானிலம் போற்றும் நட்பு” என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம்.

(தொடரும்)

## படித்ததில் பிடித்தது



நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

- செல்வகுமார் -

## வேலையை ரசித்துச் செய்!

ஒரு தாயும் மகனும் மட்டும் வாழ்ந்த வீடு அது. ஏழைக்குடும்பம். வீட்டுத்தலைவர் சில ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டார். இப்போது தாய்க்கும் உடல் நிலை சரியில்லை. மரணத்தருவாயில் இருந்த தாயிடம் அம்மா நீயும் என்னை விட்டுப் போய்விடாதே. நீயும் போய் விட்டால் நான் அனாதையாகிவிடுவேனே? என அவளது கையைப் பிடித்து அழு தான் அவளது பதினாறு வயது மகன்.

தாய் சொன்னாள், மகனே! எந்தச் சூழ்நிலையிலும் கலக்கம் கூடாது. ஜப்பானிலுள்ள ஹிரோஷிமாவும் நாகசாகி யும் எத்தனை அனாதைகளை உருவாக்கியது தெரியுமா? அவர்களெல் லாம் வாழாமல் போய்விட்டனரா? ஒன்றை மட்டும் புரிந்துகொள். உன் தந்தை அடிக்கடி என்னிடம் ஒரு விடயத்தை சொல்வார். அதையே உனக்கு சொல்கி றேன் என்ற தாயிடம் அந்தத் துயரமான சூழ்நிலையையும் மறந்து அவள் சொல் வதைக் கேட்க ஆர்வமானான் மகன்.

மகனே! நீ ஒரு கலைஞனாகி விடு. பிழைத்துக் கொள்வாய். அதற்காகப் பெரிய கலைஞன் ஆக வேண்டும் எனச்



சொல்லவில்லை. உனக்குக் கழிவறை சுத்தம் செய்யும் பணி கிடைத்தால்கூட அதையும் பாக்கியமாகக் கருதி ரசித்து செய். நீ சுத்தம் செய்வதுபோல வேறு யாரும் அதை சுத்தம் செய்ய முடியாதபடி இருக்கவேண்டும். உன் வேலையில் ஒரு தனித்துவம் வெளிப்பட வேண்டும் என்றாள்.

ஆம், உங்கள் வேலையை ரசித்து செய்யுங்கள். ரசித்து செய்யும் வேலையில் தான் சுகமும் திருப்தியும் இருக்கிறது.

# டேவிட் ராசையா, இளையராஜா ஆனது இப்படித்தான்!

**நேர்காணல் - ஆர் செல்வராஷ்** **நேர்கண்டவர் - கண்ணன்**

தமிழ் திரையில் அசல் கிராமங்களை காட்சிபடுத்தியதில் முக்கியப் பங்களிப்பு செய்தவர், ஆர். செல்வராஜ். தன் 55 ஆண்டு திரைப் பணியில் 230 திரைக் கதைகளுக்கு சொந்தக்காரர். இளைய ராஜா அறிமுகமான 'அன்னக்கிளி' படத்தின் கதையை எழுதியவர். 'முதல் மரியாதை', 'கிழக்கே போகும் ரயில்', 'புது நெல்லு புது நாத்து' உட்பட பாரதிராஜா வின் பெரும்பாலான படங்களுக்கு இவர்தான் கதை. பாக்யராஜின் 'புதிய வார்ப்புகள்', மணிரத்னத்தின் 'இதய கோவில்', 'உதயகீதம்', 'அலைபாயுதே' மற்றும் 'சின்னக் கவுண்டர்' என திரையில் நாம் ரசித்த முக்கியமான திரைப் படங்களின் கதை ஆர். செல்வராஜ் எழுதியவைதான். சமீபத்தில் (ஒகஸ்ற் 15) 75 வயதை நிறைவு செய்து 76 வயதில் அடியெடுத்து வைத்துள்ள ஆர். செல்வ ராஜை சென்னை கோடம்பாக்கத்தில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்தோம். தன் அரை நூறாண்டு கடந்த திரைப் பயணத்தை நம்முடன் பகிர்ந்துகொண்டார்.

**முதலில் உங்களைப் பற்றி நீங்கள் சினிமாவுக்கு வந்ததைப் பற்றி இளையராஜா, பாரதிராஜா, நீங்கள் மூவரும் ஒரு குழுவாக இணைந்தது பற்றி சுருக்கமாகச் சொல்லுங்கள்?**

எனக்கு சொந்த ஊர் மதுரை. என் சித்தப்பாதான் (எங்கப்பாவின் தம்பி) மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் சங்கரய்யா. டேவிட் ராசையா என்பவனும் நானும் சிறு வயதிலேருந்தே நண்பர்கள். டேவிட் ராசையாதான் தற்போது இளைய ராஜா. அவனுக்கு சினிமாவுக்கு வர வேண்டும் என்று சிறு வயதிலேயே ஆசை. எனக்கும் சினிமாவுக்கு வர வேண்டும் என்ற ஆசை இருந்தது. அவன் ஊரிலிருந்து கிளம்பி எங்க வீட்டுக்கு வருவான். மதுரையில் மணலோடு இருக்கும் வைகை ஆற்றில் பாலத்திற்கு கீழே நானும் அவனும் உட்கார்ந்து சினிமா கனவுகளைப் பற்றி பேசிக் கொண்டிருப்போம். இசையமைப்பாளர், இயக்குநர் என்று அந்த கனவுகள் விரிந்துகொண்டு போகும்.

இந்த சமயத்தில் நான் ஒரு கதை எழுதினேன். அந்த கதையின் தலைப்பு 'இணைகோடுகள்'. விபசாரத்தை ஒழிக்க வேண்டுமென்று ஒருவன் புறப்படுகிறான். அப்போது ஒரு பெண் மட்டும் அந்தத் தொழிலை விடமாட்டேன் என்கிறாள். 'நீ ஒரு கல்யாணம் பண்ணிக்கக் கூடாதா?' என்று கேட்பவனிடம், 'நீ செஞ்சுக்கிறியா' என்று திருப்பிக் கேட்கிறாள். 'நீ நல்ல மனைவியா இரு. நான் கல்யாணம் பண்ணிக்கிறேன்' என்கிறான். அதற்கு அவள், 'நீ நல்ல கணவனா இரு' என்கிறாள். இருவருக்கும் திருமணமா கிறது. இந்தக் கதை ப்ளாஸ்பேக்கில் ஆரம்பிக்கும்.



அந்த ப்ளாஸ்பேக்கில் அவன் சிறையில் இருப்பான். அவன் பெயிலில் வரும்போது, அவன் மனைவி மீண்டும் விபசாரத்தில் ஈடுபட்டு இருப்பாள். ஒரு நாள் காத்திருந்து மனைவியை சந்தித்து, 'நான் ஜெயிலில் கேள்விபட்டது உண்மையா' என்று கேட்பான். அவன் மனைவி, 'உண்மைதான்' என்கிறாள். 'ஏன் கொடுத்த வாக்கை மீறினாய்' என்று கேட்கிறபோது, 'நீதான் வாக்கை மீறினாய்' என்கிறாள். மேலும், 'நான் ஒரு நல்ல கணவனைத்தான் கேட்டேன். நல்ல தலைவனை கேட்கவில்லை' என்கிறாள். அவளுக்கும் சமுதாய பிரச்சனைகளில் ஈடுபாடு இருக்கிறது. ஆனால், எப்படி இருந்தாலும் அவளுக்கு நல்ல கணவன் வேண்டும். இவன் மீண்டும் ஜெயிலுக்கு போகிறான். இருவரும் இணைய முடியாது. இதுதான் இணைகோடுகள்.

இந்தக் கதையை எழுதியபோது எனக்கு பதினான்கு வயசு. இந்தக் கதையை தமிழ்நாட்டின் சிறந்த கதையாக 'மாலை முரசு' பத்திரிகையில் தேர்வு செய்தனர். அதற்கு எனக்கு 20 ரூபாய் கொடுத்தார்கள். கதையை படித்த எல்லோரும் இவனுக்கு இன்னும் பதினான்கு வயசு ஆகலை. எப்படி இவன் விபசாரத்தைப் பற்றி எழுதுகிறான் என்ற கேட்டார்கள். ஆனால், எல்லோரும் நன்றாக இருக்கிறது என்றனர்.

'இணைகோடுகள்' கதையை படித்தவர் களில் ஒருவன் பால்பாண்டி (இப்போது பாரதிராஜா). டேவிட் ராசையா, பாஸ்கர் (இளையராஜா அண்ணன்) இருவருக்கும் பால்பாண்டி நண்பன். டேவிட் ராசையா, பாஸ்கர் இருவரிடமும், "ஆர். செல்வராஜ்னு ஒரு ஆள் மாலை முரசுல சூப்பரா ஒரு கதை எழுதியிருக்கார்"னு பால்பாண்டி சொல்ல, அவர்கள் "செல்வராஜ் எங்கள் ஃபிரெண்ட்தாண்டா" என்றிருக்கிறார்கள். அவர்களுடன் பால்பாண்டி என்னைப் பார்க்க வந்தான்.

இங்கேயிருந்து எங்களுக்குள் ஒரு நட்பு உருவாகி நாங்கள் ஒரு குழுவாக சேர்ந்தோம்.

**நீங்கள் எப்போது சினிமாவுக்கு வந்தீர்கள்?**

1962ஆம் ஆண்டு பிப்ரவரி 12ஆம் தேதி நான் சினிமாவிற்குள் வந்தேன். ஆரம்பத்தில் 'மல்லியம்' ராஜகோபால், பாலமுருகன் போன்ற பல பெரிய இயக்குநர்களிடம் உதவி இயக்குனராக இருந்தேன். கே. சுப்பராவ், டி.எஸ். பிரகாஷ்ராவ் போன்றவர்களிடமும் வேலை பார்த்து இருக்கிறேன்.

அதன்பிறகு பாரதிராஜா, இளையராஜா, கங்கை அமரன் எல்லோரும் சென்னைக்கு வந்தார்கள். ஆரம்பத்தில் நாங்கள் மைலாப்பூர் கச்சேரி சாலையில் இருந்தோம். அக்காலம் முழுக்க ரொம்ப போராட்டமான வாழ்க்கைதான். எங்களில் கங்கை அமரனுக்கு நல்ல நகைச்சுவை உணர்வு உண்டு. சாப்பாட்டுக்கு வழி யில்லாத ஒருமுறை, இரண்டு நாட்களாக சாப்பிடாத நிலையில், கங்கை அமரன், நான் எழுதி வைத்திருந்த கதையை யெல்லாம் எடுத்துக்கொண்டு வீசைக்கு போட கிளம்பிவிட்டார். அவர் சென்றபிறகு தான் எனக்கே தெரியும். திரும்பி வந்தவரிடம், "ஏன் இப்படியெல்லாம் செய்கிறாய்" என்று கேட்டால், "உங்க கதை வெயிட்டாக இல்லை. பணம் தேறவில்லை" என்றார்.

பிறகு, மிச்சமிருந்த கதையின் பிரதிகளை எடுத்துசென்று, அந்தக் கடையில் இருக்கும் ஒரு படிக்கல்லை அந்த பேப்பர்களுக்கு இடையில் சொருகி வைத்து, நிறுத்து போட்டுவிட்டு காசு வாங்கிக்கொண்டு வந்தார். "இப்போது உங்க கதை நல்ல வெயிட் அண்ணே" என்றார். அந்த காசில் கஞ்சி வைத்து, வரமிளகாய் அரைத்து சேர்த்து சாப்பிட்டோம். அப்படி ஒரு வாழ்க்கை.

ஆனால், அக்காலத்திலேயும் கலைஞர்கள் என்ற கர்வத்தை நாங்கள் கைவிட்ட தில்லை. அப்போது, ஒரு நடிகர் வீட்டிற்கு கதை சொல்லப் போனேன். அவர் மேஜையில் உட்கார்ந்து கொண்டு காலை ஆட்டிக்கொண்டே கதை சொல்லச் சொன்னார். வெளியிலே இளையராஜா, கங்கை அமரன் எல்லாம் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனெனில், கதை சொன்னால் ஐநூறு ரூபாய் கிடைக்கும். அதை வைத்து சாப்பிடலாம் என்று திட்டமிட்டிருந்தோம். ஆனாலும், "அந்த ஜூவை கழட்டி போட்டால் நான் கதை சொல்கிறேன்" என்றேன். உடனே அவர், "என் வீட்டுக்குள்ளேயே வந்து இப்படி பேசுறியா" என்றார். "நான் எழுத்தாளன்" என்றேன். என்னை வெளியே தள்ளி கதவை சாத்தினார்கள். (காலங்கள் மாறி, வீடு வாசல் எல்லாம் போய், ஆட்டோவில் அவர் என் வீட்டுக்கு வந்தது தனிக்கதை.) அந்த சூழ்நிலையில் எனக்கு உதவியாக 'ஒரு விரல்' கிருஷ்ணாராவ், எம்.ஜி. வல்லவன், 'பேசும்படம்' சம்பத்குமார் ஆகியோர் இருந்தனர். ரொம்ப வறுமை யான காலகட்டத்தில் சம்பத் குமாரை பார்க்கப் போனால் கண்டிப்பாக ஒரு டீயும் வடையும் வாங்கித் தருவார். ஏனெனில், அவர் வசதியும் அவ்வளவுதான்.



இசையமைப்பாளர் வெங்கடேஷ் குழுவில் இளையராஜா கிடார் வாசித்துக்கொண்டு இருந்தார். ஆனால், அதில் அவர்களுக்கு பெரிய பெயர் கிடைக்கவில்லை. எனவே, எங்கள் கஷ்டகாலம் தொடர்ந்தது.

**'அன்னக்கிளி' வாய்ப்பு எப்படி வந்தது?**


பஞ்சு அருணாசலம் அவர்களை, கண்ண தாசன் அவர்களிடம் உதவியாளராக இருந்த காலத்திலிருந்து எனக்கு அறிமுகம். நானும் அவரும் ஓர் இடத்தில் ஒன்றாகப் பத்துநாள் இருக்க வேண்டி வந்தது. 'வசந்த மாளிகை' படத்திற்காக

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)

# Executive House for Sale

## CLARINGTON / NORTNVILLE



- Land Size from 0.50 Acre to 1.0 Acre
- Standard House size from 3000 SF to 10,000 SF
- Gararges : 3 or 2
- Type of Houses : Bungalow, Bungalow with Loft and 2 Storey
- Only 45 minutes from Scarborough

**Phase I Only 21 Lots**

**Completion : Spring 2025**

*For more information*
*Feel Free to Call .....*

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2

**Tel: 416-321-6969**

* Independently owned and operated.

# டேவிட்...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

ராமநாயுடு என்னை மகாபலிபுரத்துக்கு அழைத்திருந்தார். கண்ணதாசன், கே.வி. மகாதேவன் போன்றோர்களும் அங்கு இருந்தனர். அங்கு ஓர் அறையில் நானும் பஞ்சு அருணாசலமும் இருந்தோம். இந்த



பத்து நாட்களும் கம்போசிங் முடிந்த பிறகு கடற்கரையோரமாக நடந்து கொண்டே பல விஷயங்களை நானும் பஞ்சும் பேசிக் கொண்டிருப்போம். அப்போது அவர், 'எவ்வளவு நாளைக்கு இப்படியே இருக்கிறது' என்று கவலையோடு சொன்னார். அதற்கு நான், 'கவலைப்படாதிங்க நல்ல கதை ஒன்று இருக்கு' என்று சொல்லிவிட்டு. 'மருத்துவச்சி' என்ற என் ஒரு கதையை சொன்னேன். அப்போது அவர், "நான் தயாரிப்பாளராக இருந்து கண்டிப்பாக இந்தக் கதையை எடுக்கிறேன்'' என்றார்.

முன்பு சென்னையில் கிளப் ஹவுஸ் என்று ஒன்றிருந்தது. இப்போது இல்லை. அங்கு நாகேஷ், ஸ்ரீகாந்த் போன்ற திரைப்படத் துறையினர் வருவார்கள். அது ஒரு தலைமை செயலகம் மாதிரி. அங்கே எஸ்.பி. முத்துராமன் ரூம் போட்டிருந்தார். அங்கே கதை கேட்டு கேட்டு சோர்வாகி, ரிலாக்ஸ் செய்ய மேல் மாடிக்கு வருவார்கள். அப்போது எஸ்.பி. முத்துராமனிடம் 'சிம்மராசி' என்ற கதையைச் சொன்னேன். ஆனால், கதையை வாங்கினீங்கின்னா, பஞ்சு அருணாசலம்தான் வசனம் எழுதுவார் என திட்டவட்டமாகக் கூறிவிட்டேன். ஏனெனில், அப்போது பஞ்சு அருணாசலம் வேலை இல்லாமல் இருந்தார். உடனே பஞ்சு அருணாசலம், "ஒருத்தர் நல்லா வந்தா சரிதானே'' என்றார். நான் என் முடிவில் உறுதியாக இருந்துவிட்டேன். எனக்கு பணம் முக்கியமில்லை என்றாலும் பத்து நாட்களாக இருந்த என் நண்பருக்கு பணம் முக்கியம். கதையை வாங்கி, கதை வசனம்: பஞ்சு அருணாசலம் என்று ஒரே அக்ரிமெண்டாக போட்டு அவருக்கு 7,500 ரூபாயும், எனக்கு 2,500 ரூபாயும் கொடுத்தார்கள். 'சிம்மராசி' என்ற பெயரை 'எங்கம்மா சபதம்' என்று வைத்தார்கள். அந்தப் படம் மிகப்பெரிய ஹிட். குரோம்பேட்டை வெற்றி தியேட்டரில் மிகப் பெரிய வெற்றியைக் கொண்டாடினார்கள். ஆனால், இந்தப் படத்தை பார்த்த கம்யூனிஸ்ட் கட்சியினருக்கு பயங்கர கோபம். 'இவ்வளவு நாள் உனக்கு கட்சியில்ல என்னவெல்லாம் சொல்லிக் கொடுத்தோம். கடைசியில் தொழிலாளி மோசம் பண்ணிட்டான் என்பதுபோல் கதை சொல்லிவிட்டாயே' என்றார்கள். அதற்கு நான் 'கட்சி வேறு, படைப்பு வேறு' என்றுவிட்டேன்.

இந்தப் படத்துக்குப் பிறகு, பஞ்சு சாருக்கு ஒரு ஆப்பர் வருகிறது. ஒரு பைனான்சியர் கிடைக்கிறார். அவர் 'மருத்துவச்சி' கதையை பண்ணலாமா என்று கேட்டார். 'எங்கம்மா சபதம்' படத்திற்கு வைத்த அதே கண்டிஷனை இங்கே வேறு மாதிரி வைத்தேன். நீங்கள் இந்தப் படத்தை பண்ணினால், மியூசிஸிக் பாவலர் பிரதர்ஸ்தான் என்றேன். 'புது ஆட்களை போடுறதா' என்று அவர் யோசித்தார். அவர் தயக்கத்தைப் போக்க, இளைய ராஜா ஒரு ஆர்கெஸ்ட்ராவை பிடித்து சினிமாவுக்கு வேண்டியமாதிரி இசை யமைத்து, 'மச்சானை பார்த்தீங்களா' பாட்டை டேப்பில் பதிவு பண்ணினார். (அந்த ஆர்க்ஸ்ட்ராவை கடைசிவரை வைத்திருந்தார்.) அந்தப் பாட்டை கேட்டவு டன் பஞ்சு அருணாசலம் அசந்துவிட்டார்.

கண்ணதாசன் வீட்டுக்கு அருகே ஒரு கல்யாண மண்டபம் இருந்தது. அங்கேதான் இந்த ஆர்கெஸ்ட்ரா பாட்டை அரங்கேற்றினார்கள். அங்கு ஒரு பூங்கா இருந்தது. அந்த பூங்காவிற்கு வந்தவர் கள், அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் எல்லாரும் சேர்ந்து, அந்தப் பாட்டைக் கேட்டு கைதட்டினார்கள். அந்த கைத் தட்டு விண்ணை பிளந்தது. அப்போதே தெரிந்தது அந்தப் படம் ஹிட் என்று.

"ஆனால், 'பாவலர் பிரதர்ஸ்' என்ற பெயர் எல்லாம் சினிமாவுக்கு சரியாக வாராது. மேலும், ஓர் ஆள் பெயர் மட்டும் வைத்தால்தான் சரியாக இருக்கும். அதனால் பெயரை மாற்றனும்'' என்றார், பஞ்சு அருணாச்சலம். டேவிட் ராசையாவை நாங்கள் ராஜா என்றுதான் கூப்பிடுவோம். ஆனால், அப்போது ஏ.எம். ராஜா என்ற ஒரு பெரியவர் இருந்தார். இதையெல்லாம் யோசனை செய்து, பஞ்சு அருணாசலம், "இன்னையிலேயிருந்து உன்னோட பெயர் இளையராஜா. நீதான் இந்தப் படத்திற்கு மியூசிஸிக் டைரக்டர்'' என்று அட்வான்ஸ் கொடுத்தார். அப்போது அவரது சகோதரர்களுக்கும் அது சரியாக இருந்தது.

'அன்னக்கிளி' படத்தை யாரை வைத்து இயக்குவது என்று யோசித்தோம். எஸ்.பி. முத்துராமன் அப்போது ரொம்ப பிஸியாக இருந்தார். இதற்கிடையில் தேவராஜ் என்னிடம், 'படம் பண்ணனும். ரொம்ப நாளாயிடுச்சுன்'னு சொல்லிக்கொண்டு இருந்தார். நான், பஞ்சு அருணாசலம் சாரிடம், தேவராஜ் - மோகனை வைத்து 'அன்னக்கிளி'யை பண்ணலாமே என்று சொன்னேன். அதன்பிறகு, தேவராஜுவிடம் பஞ்சு அருணாசலம் கதை சொன்னார். 'நான் பண்றேன்' என்றார் தேவராஜ். நான் என்ன நினைக்கிறேன், பஞ்சு அருணாசலம் என்ன நினைக்கிறார் என்று கேட்டுக்கேட்டு மிக நுணுக்கமாக ஒவ்வொரு காட்சியையும் எடுத்தார்.

**தமிழ் திரையுலகில் ஒரு கூட்டணி வெற்றி பெற்றுவிட்டால் சுலபத்தில் அதனை விடமாட்டார்கள். ஆனால், 'அன்னக்கிளி' கூட்டணி அப்படி தொடர்ந்து படம் செய்தமாதிரி தெரியவில்லையே, என்ன காரணம்?**

அடுத்த இதழில் தொடரும்;






# மனைவி, வீடு...



குடியிற் பிறந்த குடியன் குடியால்
குடியைக் கெடுக்க குடியள் _ குடியால்
துரத்தக் குடிவிட்டுச் சென்றதந்தச் செய்தி
பரவத் தொடங்கியதே பார்.

நற்குடி யிற்பிறந்தோர் நாணயங் காத்திடுவர்
வற்புறுத்தல் ஏதுமற்ற வாய்மையர் _ சொற்சிலம்பம்
ஆடாத செம்மையர் ஆழமாம் சிந்திப்பால்
வாடாத வாழ்வ்வர்க்கு வாய்ப்பு.

ஈகைநகை இன்சொல் இகழாமை நான்கும்
தாகமாய்க் கொண்டொழுகும் தன்மையர் _ ஈகையவர்
சேர்த்தவற்றை இன்பமுடன் செய்பணியாய்க் கொண்டிடுவர்
தேர்ந்துணர்ந்து செய்யும் சிறப்பு.

ஒழுக்கம் உயிராக ஓம்பி இருப்பர்
வழுக்கற்ற வாழ்வுடனே வாழ்ந்து _ நழுவலின்றி
ஊரிற் சிறப்பாக உண்மைத் தலைவனாய்க்
காரியம் ஆற்றிடுவர் காண்.

பல்கோடி யாயினும் பணபாய் வராவிட்டால்
செல்லாப் பொருளென்று சீறிடுவர் _ நல்வழியில்
சேர்பொருளைச் செப்பமுறப் பங்கிட்டு இன்புறுவர்
ஆர்வமுள்ள சிந்தையரே ஆம்.

செப்பமும் நாணயமும் சேரவே செய்தொழிலை
தப்பின்றிச் செய்திடுவர் இக்குடியர் _ தப்பதனைக்
கண்டிட்டால் தாங்காதே கண்டிப்பாய்ச் சீர்செய்து
தண்டனையும் தான்கொடுப்பர் தான்.

முருகேசு மயில்வாகனன்

## BASEMENT FOR RENT

***MARKHAM & HWY 7***
1 bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking & sep. laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.883.1054**

**MORNINGSIDE & FINCH**
1 bedroom bsmt for rent . Sep. entrance, laundry & kitchen. Close to TTC, ERRA sup.market. Avail. immediately.
**416.894.5904 / 647.537.8976**

**MIDLAND & EGLINTON**
2 Bedroom walk out Bsmt for rent. Close to all facilities. Avai. November 01, 2022.
**647.978.2785 / 905.201.8525**

